வீடுகளுக்குத் தங்கள் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டியும், ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியும், காவலர்களுக்கே காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, 2012—2013 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 37 முதல் 42 வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிருக்கு வான் மழைபோல், நாடிய மனிதருக்கெல்லாம் வாழ்வளிக்கும் ஒளி விளக்கே, கேடு நினைக்கும் வீணர்களைச் சுட்டெரிக்கும் சுடர் விளக்கே, தீய சக்திகளால் இருண்டுபோன தமிழகத்திற்கு புத்தொளி பாய்ச்சிட புதுப்புது உறுதியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற தெய்வ சக்தியே, தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் வெற்றித் திருமகளே, பட்டமரத்தையும் தளிர்க்க வைக்கும் தெய்வத் திருமகளே, எதிரிகளைத் தொடை நடுங்க பகை முடிக்கும் வீரத் திருமகளே, நல்லோரை வாழவைத்திட, தீயோரை அழித்திட, திக்கற்றோரின் துயர் துடைத்திட, காலம் நமக்குத் தந்திட்ட அருட்கொடையாம் ஆயிரம் கண்ணுடை அன்புத் தாயே, நாள்தோறும், நாள்தோறும், துறைதோறும், துறைதோறும் புதுமைகள் படைத்து வருகின்ற புறநானூற்றுத் தாயே, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்கின்ற சீறிப் பாயும் இளம் சிங்கங்களின் சிறப்புப் படை அமைத்து இளைஞர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்திட்ட இளைய சமுதாயத்தின் விடிவெள்ளியே, அம்பானி வீட்டுப் பிள்ளைகளுக்கும் கிடைத்திடாத வகை, வகையான அறுசுவை உணவுகளையும், சாமானிய வீட்டுக் குழந்தைகளுக்கும் வாரி வழங்கியிருக்கின்ற அன்னபூரணியே, (மேசையைத் தட்டும் ஒலி) நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு; ஆம், வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்களை நம்பினோர் யாரும் கெட்டதில்லை, இது சத்தியத்தின் தீர்ப்பு. கடைக்கோடி சாதாரண சாமானியத் தொண்டனான எனக்கு அரசு

2012 நவம்பர் 2] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

உறுதிமொழிக் குழுவின் தலைவராகப் பணியாற்றிட நல்வாய்ப்பு வழங்கியிருக்கின்ற கருணையின் பிறப்பிடமே, அன்பின் திருவுருவமே, ஆற்றலின் இருப்பிடமே, வீரத்தின் விளை நிலமே, வெற்றியின் விலாசமே, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியே, வாழும் மனித தெய்வமே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின் 35 முதல் 39 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ச) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா டாக்டர் வைகைச்செல்வன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

***டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு என்றால் அன்பு என்று பொருள். அன்பு என்றால் அம்மா என்று பொருள். அம்மாவை அம்மா என்று அழைக்கலாம். அம்மாவைக் கடவுள் என்றும் அழைக்கலாம். அந்தக் கடவுளாக இருக்கின்ற எங்கள் அன்னையே, நட்பின் இலக்கணத்தை வரையறை செய்ய வேண்டுமென்று கேட்டபோது, நட்பை நகமும் சதையும் என்று வரையறை செய்தார்கள். ஒரு நண்பர் கேட்டார். நட்பை நகமும் சதையும் என்று சொன்னாயே, ஆகவேதான் நான் வளர, வளர-நகம் வளர, வளர வெட்டி விடுகின்றாயோ என்று சொன்னாராம். ஆக, இப்படிப்பட்டவர்கள் வாழுகின்ற உலகில் நாதியற்றோருக்கும், நலிந்தோருக்கும், கண்ணீரோடும், கவலையோடும், காலத்தாலும், கொண்ட கோலத்தாலும், சீலத்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், வேதனையாலும், துன்பத்தாலும் துவண்டு கொண்டிருக்கின்றவர்களையும், கரை சேர்க்கின்ற கலங்கரைவிளக்கமாக, கடவுளாக விளங்குகின்ற எங்கள் அன்னையே, இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றக் கூடியவர், தமிழகத்தின் முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்கின்ற தகுதியும், மிகுதியும் படைத்து, ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டைக் கொத்தளத்தில் தர்பார் மண்டபத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிற மாண்புமை பொருந்திய தமிழ்நாடு